**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII Code of Criminal Procedure)**
**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, FAST TRACK COURT, KARAIKUDI.**
**C.C. No.182/2024 PW.1**

| | | | | |
|---|---|---|---|---|
| பெயர்: | : | நைனா முகம்மது. | த–பெ /க.பெ. | ஷாகுல் ஹமீது |
| ஊர்: | : | காரைக்குடி | சமயம்: | |
| வயது: | : | 53/2025 | வட்டம்: | |
| தொழில்: | : | தனியார் நிறுவனத்தில் வேலை | மாவட்டம் | |

**Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 31.07.2025**

---------------------------------------------------------------------------------------------

**31.07.2025**
**குறுக்கு விசாரணை**

1) நான் தற்போது காரைக்குடி காட்டுதலைவாசலில் வசித்து வருகிறேன். நான் பொள்ளாச்சியில் உள்ள தனியார் நிறுவனத்தில் வேலை செய்து வருகிறேன். நான் பொள்ளாட்சியில் தங்கி வேலை செய்து வருகிறேன். காரைக்குடி டவுன் சர்வே எண் 420/பி, மற்றும் 421/பி தற்போதைய ரீ சர்வே எண் 550/2 யாருக்கு பாத்தியப்பட்டது என்றால் ஆதியில் என் தாயாருக்கு பாத்தியப்பட்டது. மேற்படி சர்வே எண்ணில் மொத்த இடம் 9 சென்ட் ஆகும். மேற்படி சொத்து என் தாயார் தனித்து சம்பாத்தியத்தில் வாங்கப்பட்ட சொத்து என்றால் சரிதான். என் தாயார் மேற்படி இடத்திற்கு என் பெயருக்கு இனாம் செட்டில்மென்ட் கொடுத்தார் என்றால் சரிதான். அதன் பின்னர் எதிரி என்னிடம் மேற்படி இடத்தை கிரையம் பெறவேண்டி கேட்டார் என்றால் சரிதான். மேற்படி சொத்திற்கு எவ்வளவு தொகை பேசினோம் என்றால் 74 லட்சத்திற்கு பேசினோம். அதன் பின்னர் நானும் எதிரியும் ஒரு ஒப்பந்தம் செய்துகொண்டோம் என்று சொன்னால் சரிதான். மேற்படி ஒப்பந்தத்தை நீதிமன்றத்தில் தாக்கல் செய்திருக்கிறேன் என்றால் சரிதான்.

2) மேற்படி ஒப்பந்தம் எந்த வருடம் எந்த தேதியில் ஏற்படுத்தப்பட்டது என்றால் 2022ம் வருடம் ஏற்படுத்தப்பட்டது. மேற்படி கிரைய ஒப்பந்த பத்திரத்தில் எவ்வளவு தொகை முன்பணமாக பெற்றுக்கொண்டேன் என்றால் ரூ. 10 லட்சம் வாங்கினேன். அதன் பின்னர் எந்த தேதியில் யார் யாருக்கு கொடுத்தேன் என்றால் மே 2022ல் எதிரிக்கும் எதிரியின் மனைவியான ஜாஸ்மின் ராணி என்பவருக்கும் கிரையம் கொடுத்தேன். கிரையம் கொடுத்தபோது மொத்த தொகையை பெற்றுக்கொண்டேனா என்றால் ரூ. 10 லட்சம் அட்வான்ஸ் தொகையையும் சேர்த்து மொத்தமாக ரூ. 40 லட்சத்து 15 ஆயிரம் பெற்றுக்கொண்டேன். கிரைய ஒப்பந்தம் ஏற்படுத்திக்கொள்ளும் முன்னர் எனக்கும் என் உடன் பிறந்தவர்களுக்கும் சிவகங்கை மாண்புமிகு மாவட்ட அமர்வு நீதிமன்றத்தில் அசல் வழக்கு எண் 57/2013 என்ற வழக்கு நடந்தது என்றால் சரிதான்.

3) மேற்படி அசல் வழக்கை யார் தாக்கல் செய்தார் என்றால் என் சகோதரி சல்ஹா பீவி தாக்கல் செய்தார். என்ன பரிகாரம் கோரி வழக்கு தாக்கல் செய்தார் என்றால் எனது தாயர் மற்றும் தகப்பனார் வழி சொத்துக்களுக்கு பாகபிரிவினை கோரி வழக்கு தாக்கல் செய்தார். என் சகோதரி தாக்கல் செய்த வழக்கில் நான் எதிரிக்கும் அவரது மனைவிக்கும் கிரையம் செய்து கொடுத்ததும் உள்ளது என்றால் சரிதான். சிவகங்கை மாண்புமிகு மாவட்ட அமர்வு நீதிமன்றத்தில் கடந்த 21.03.2021ல் மேற்படி நான் எதிரிக்கும் அவரது மனைவிக்கும் கிரையம் செய்து கொடுத்த சொத்தினை தவிர மற்ற சொத்துக்களை பிரித்து கொள்ள வேண்டும் என்று தீர்ப்பும் தீர்ப்பாணையும் வழங்கப்பட்டது. நான் எதிரிக்கும் அவரது மனைவிக்கும் கிரையம் செய்து கொடுத்த சொத்து எனக்கு தனித்து பாத்தியப்பட்டது என்று உத்தரவிடப்பட்டுள்ளது. வகங்கை மாண்புமிகு மாவட்ட அமர்வு நீதிமன்றத்தில் ஏற்பட்ட உத்தரவை எதிரித்து மேல் முறையீடு யார் செய்தார் என்றால் என் மூத்த சகோதரர் சையது பாவா. மேல் முறையீடு எண் AS (MD)No. 193/2022 என்றால் சரிதான். மேல் முறையீடானது மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்றம், மதுரை கிளையில் நடைபெற்றது என்றால் சரிதான்.

4) மேல் முறையீடு தாக்கல் செய்வதற்கு முன்பு நான் எதிரிக்கும் அவரது மனைவிக்கும் சொத்தை கிரையம் செய்து கொடுத்துவிட்டேன் என்றால் சரிதான். மேல் முறையீடு தாக்கல் செய்த பின்னர் மாண்புமிகு சென்னை

உயர்நீதிமன்றம், மதுரை கிளையில் நானும் என் உடன் பிறந்தவர்களும், சமரசம் பேசி சமரச உடன்படிக்கையில் கையெழுத்து செய்து மேற்டிப மேல் முறையீட்டை வாபஸ் பெற்றுக்கொண்டோம் என்றால் நான் சமரசத்தில் ஈடுபடவில்லை. மேற்படி சமரச உடன்படிக்கையில் கையெழுத்து செய்யவில்லை. மேல்முறையீட்டில் நான் எந்த வழக்கறிஞரும் நியமிக்கவில்லை. மேற்படி சமரச உடன்படிக்கையில் நான் எதிரிக்கும், எதிரியின் மனைவிக்கும் எழுதிக்கொடுத்த சொத்தும் உள்ளது என்றால் என் மூத்த சகோதரர் போலியாக ஏற்படுத்தி கொடுத்துள்ளார். எதிரி சொல்வதுபோல் நான் சமரச உடன்படிக்கையில் கையொப்பம் செய்து மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்றம், மதுரை கிளையில் நேரில் ஆஜராகி மேற்படி மேல் முறையீட்டு வழக்கினை சமரசம் உடன் படிக்கை அடிப்படையில் வாபஸ் பெற்றுக்கொண்டேன் என்றால் சாட்சி தற்போது மேற்படி சென்னை உயர்நீதிமன்றம், மதுரை கிளையில் நேரில் ஆஜரானதாக கூறுகிறார். ஆஜராகி எனது தகப்பானர் வழி சொத்திற்கு சமரசமாக பாகப்பிரிவினை செய்வதற்காக சென்றேன். அவ்வாறு சமரசமாக பேசியபோது அங்கு எதுவும் கையெழுத்து செய்யவில்லை.

5) நான் சமரச உடன்படிக்கையில் கையொப்பம் செய்து நான் எதிரிக்கும் அவரது மனைவிக்கும் கிரையம் கொடுத்த சொத்தையும் சேர்த்து உடன் பிறந்தவர்கள் அனைவருக்கும் சமமாக பிரித்துக்கொள்வோம் என்று கையெழுத்து செய்தேன் என்றால் சரியல்ல. இவ்வழக்கு காசோலை ம.சா.ஆ. 1 எனக்கு எப்போது யாரால் கொடுக்கப்பட்டது என்றால் என்னிடம் கிரையம் பெற்ற எதிரி என்னிடம் கொடுத்தார். எப்போது எங்கு வைத்துக் கொடுத்தார் என்றால் 2024 ஜனவரி மாதம் எதிரி நடத்திவரும் கடையில் வைத்துக்கொடுத்தார். மேற்படி வழக்கு காசோலையை யார் பூர்த்தி செய்தார் என்றால் எதிரிதான் எழுதிக்கொடுத்தார். மேற்படி வழக்கு காசோலை எப்படி எழுதியிருந்தது என்றால் தமிழில் எழுதியுள்ளது. என்னிடம் காட்டப்படும் ம.சா.ஆ. 1 காசோலையானது பெயரும், தேதியும், ஒரு மையினாலும், மற்றவிபரங்கள் வேறு மையினாலும், எழுதப்பட்டுள்ளது என்றால் சரிதான், காசோலையை என்னிடம் கொடுத்தபோது தேதியையும், பெயரையும். என்னை பூர்த்தி செய்து கொள்ள சொன்னார். நான் பணம் போட்ட பின்னர் நான் சொல்கிறேன் பின்னர் வங்கியில் செலுத்தி பெற்றுக்கொள்ளுங்கள் என்று சொன்னார்.

6) ம.சா.ஆ.1 காசோலை எதற்காக என்னிடம் கொடுக்கப்பட்டது என்றால் என்னிடம் கிரையம் பெற்ற இடத்திற்கு மீதி தொகையாக ரூ. 34 லட்சத்திற்கு காசோலை கொடுத்தார். பொதுவாக ஒரு இடத்தை கிரையம் கொடுக்கும்போது முழுத்தொகையையும் பெற்றுக்கொண்டபின்னர்தான் கிரையம் கொடுப்பது வழக்கம் என்றால் சரிதான். எதிரி மேற்படி இடத்திற்கு முழுத்தொகையையும் எனக்கு கொடுத்துவிட்டுதான் கிரையம் பெற்றுக்கொண்டார் என்றால் சரியல்ல. கிரையம் கொடுத்தபோது ரூ40 லட்சத்து 15 ஆயிரம் கொடுத்துவிட்டு பாக்கி தொகையான ரூ. 34 லட்சத்திற்கு வட்டியுடன் சேர்த்து தருவதாக எதிரி கூறினார். நானும், என் மகளுடைய திருமணத்திற்கு பணம் தேவைப்பப்பட்டதால் அவர் கூறியதற்கு சம்மதித்தேன். மேற்படி விபரம் அனைத்தும் வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. வழக்கு காசோலையை எப்போது நான் வங்கியில் வசூலுக்கு தாக்கல் செய்தேன் என்றால் ஏப்ரல் மாதத்தில் 2024 ல் தாக்கல் செய்தேன். இந்த வழக்கு காசோலை தாக்கல் செய்த பின்னர் வங்கியில் இருந்து என்ன குறிப்பாணை வந்தது என்றால் வழக்கு காசோலை எதிரியால் நிறுத்தி வைக்கப்பட்டது என்று வந்தது.

7) நான் 09.05.2024 வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்பினேன். மேற்படி அறிவிப்பினை எதிரி பெற்றுக்கொள்ளவில்லை. எதிரியின் இரண்டு முகவரிக்கும் அனுப்பப்பட்டது. ஒன்றில் அவர் இல்லை என்றும் இரண்டாவதில் அவர் பெற்றுக்கொள்ளவில்லை என்றும் வந்தது. அதன் பின்னர் இவ்வழக்கு காசோலையை மீண்டும் வசூலுக்கு தாக்கல் செய்தேன். ஏன் மறுபடியும் வசூலுக்கு தாக்கல் செய்தேன் என்றால் என் மகளுக்கு திருமணம் நிச்சயிக்கப்பட்டிருந்து. அதனால் மேற்படி விபரத்தை எதிரியிடம் கூறினேன். அவர் வசூலுக்கு தாக்கல் செய்ய சொன்னதால் தாக்கல் செய்தேன். பொதுவாக ஒரு வங்கியின் காசோலை நிறுத்தப்பட்டுவிட்டது என்றால் வேறு காசோலையை தான் கொடுக்க முடியும் என்றால் எதிரி கூறியதால் மீண்டும் தாக்கல் செய்தேன். மீண்டும் தாக்கல் செய்த காசோலையானது எதிரியால் நிறுத்தி வைக்கப்பட்டது என்று திருப்பப்பட்டது.

8) நான் முதன் முறையாக 02.05.2024 அன்று எதிரியால் நிறுத்தப்பட்ட பின்னர் நான் எதிரியை சந்தித்து எந்த விபரமும் பேசவில்லை என்றால் சரியல்ல. அவ்வாறு பேசப்பட்டிருந்தால் நான் வேறு காசோலைதான் பெற்றிருப்பேன்

என்றால் சரியல்ல. வழக்கில் ஒரு கடனுறுதிசீட்டை எதிரி கொடுத்தாக சொல்லியிருக்கிறேன் என்றால் சரிதான். மேற்படி கடனுறுதிசீட்டு எப்போது பெறப்பட்டது என்றால் கிரையம் பெற்ற நாள் அன்று கொடுக்கப்பட்டது. மேற்படி வழக்கு காசோலையை கொடுக்கும்போது கடனுறுதிசீட்டை திருப்பி கொடுத்துவிட்டேன். எதிரி முழுத்தொகையும் செலுத்திவிட்டதால்தான் கடனுறுதிசீட்டை மட்டும் கொடுத்துவிட்டு காசோலை தொலைந்து விட்டதாக எதிரியிடம் சொல்லியுள்ளேன் என்றால் சரியல்ல. கடனுறுதிசீட்டு கொடுக்கும்போது காசோலை கொடுக்கவில்லை. காசோலையும், கடனுறுதிசீட்டும் ஒரே நாளில் கொடுக்கப்பட்டது என்றாலும் நான் வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றாலும் சரியல்ல. நான் தாக்கல் செய்துள்ள ம.சா.ஆ.1 காசோலை 03.03.2023 அன்றே எதிரியால் நிறுத்தி வைக்கப்பட்டது என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. எதிரி என்னிடம் முழுத்தொகையையும் செலுத்திவிட்ட பின்னர் கடனுறுதிசீட்டை மட்டும் கொடுத்துவிட்டு காசோலையை தொலைந்துவிட்டதாக சொல்லியுள்ளேன் அதனால்தான் எதிரி 03.03.2023 அன்றே காசோலையை நிறுத்தி வைக்கப்பட்டது என்றால் சரியல்ல. அது பற்றி எனக்கு தெரியாது. எதிரி என்னிடம் எதுவும் சொல்லவில்லை.

**(குறுக்கு விசாரணை தொடர்ச்சிக்கா ஒத்தி வைக்கப்படுகிறது)**

சாட்சியால் திறந்த நீதிமன்றத்தில் சொல்லப்பட்டு என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு அவரால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

KARMEGAKANNAN J

Digitally signed by KARMEGAKANNAN J
Date: 2025.07.31 06:50:48 +0530

விரைவு நீதிபதி, காரைக்குடி.( மு.கூ.பொ)